Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 246

வியாழக்கிழமை
31 ஜூலை 2025

ஆடி 15 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

அத்துமீறிய மீன்பிடி
## தமிழக மீனவர்கள் 14 பேர் கைது!

மன்னார், ஜூலை 31
இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 14 பேர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
இலங்கைக் கடற்படையினர் கடற்பரப்பில் கண்காணிப்புகளில்

(பக்கம் 11)

## எதிர்வரும் இரு வாரங்கள் வடக்கில் மழை

யாழ்., ஜூலை 31
வெப்பச்சலனம் காரணமாக நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 14ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு

(பக்கம் 11)

## ரஷ்யாவில் நிலநடுக்கம் பல நாடுகளில் சுனாமி!

மொஸ்கோ, ஜூலை 31
ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தை நேற்றுக் காலை 8.8 ரிக்டர் அளவில் தாக்கிய நிலநடுக்கத்தால், உலகின் பல்வேறு நாடுகளை சுனாமி அலைகள் தாக்கியுள்ளன. இதனால், அனேகமான நாடுகள் கிலி கொண்டிருக்கின்றன.
ரஷ்யாவில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கம் இது வரை உலகைத் தாக்கிய நிலநடுக்கங்களில் ஆறாவது வலிமையான

(பக்கம் 11)

## உதயனின் கிளிநொச்சிப் பணிமனை இனந்தெரியாதவர்களால் உடைப்பு!

கிளிநொச்சி, ஜூலை 31
உதயன் ஊடக நிறுவனத்தின் கிளிநொச்சிப் பணிமனை இனந்தெரியாத நபர்களால் உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளது.
நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

(பக்கம் 11)



செம்மணிப் புதைகுழியில் உருக்கம்

# குழந்தையை அணைத்தவாறு என்புத்தொகுதியொன்று மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31
அரியாலை - செம்மணிப் புதைகுழியில், குழந்தையின் என்புத்தொகுதியை அணைத்தவாறு என்புத்தொகுதியொன்று அவதானிக்கப்பட்ட நிலையில், அவ்விரு என்புத்தொகுதிகளும் நேற்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

(பக்கம் 11)

சம்பூரில் மனித என்புத்தொகுதி
## தொடர்ச்சியான அகழ்வு தேவை
நீதிமன்றத்தில் அறிக்கை

திருகோணமலை, ஜூலை 31
திருகோணமலை - சம்பூர் பகுதியில் அண்மையில் மனித என்புச் சிதிலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் தொடர்ச்சியாக அகழ்வுப் பணிகள் தேவை என்று நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

(பக்கம் 11)

## போலி அழைப்புகளால் நிதி மோசடி அதிகரிப்பு!

கொழும்பு, ஜூலை 31
போலி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்பி பணமோசடி செய்யும் முயற்சிகள் நாட்டில் அதிகரித்துள்ளன என்று குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(பக்கம் 11)

ஏராளமான குழந்தைகளுக்கு
## விளையாட்டுகளைத் தவிர்ப்பதால் விற்றமின் குறைபாடுகள்!
மருத்துவ நிபுணர் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 31
இன்றைய குழந்தைகள் மைதான அல்லது வெளிப்புற விளையாட்டுகளைத் தவிர்த்து வருகின்ற காரணத்தால் விற்றமின் டி குறைபாடு ஏற்படுகின்றது. இந்தக் குறைபாட்டுடன் தான் இன்று ஏராளமான பிள்ளைகள் வளர்கின்றனர் என்று சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இன்றைய சூழலில் சிறுவர்கள் வெளியில் சென்று

(பக்கம் 11)



## லலித், குகன் ஆட்கொணர்வு மனு; சாட்சியமளிக்க கோத்தாபய தயார்

கொழும்பு, ஜூலை 31
2011ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட மனித உரிமைச் செயற்பாட்டாளர்களான லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் தொடர்பான ஆட்கொணர்வு மனுவில் சாட்சியமளிக்கத் தயாராக உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய அறிவித்துள்ளார்.
லலித் வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட

(பக்கம் 11)

### முச்சந்தி முரளி

'உதுக்குத்தான் அப்பவே ஓடி விளையாடு பாப்பா எண்டு பாரதியார் பாடினவர் பாருங்கோ'

## இசை நிகழ்ச்சிக்குச் சென்றவர் பாம்பு தீண்டிப் பரிதாபச் சாவு!
புத்தூரில் சோகம்



யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாணம் புத்தூர் மேற்குப் பகுதியில் பாம்பு தீண்டி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். செல்வச்சந்திரன் மிரோஜன் (வயது-27) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

(பக்கம் 11)

## இலங்கையர்களுக்கு இலவச விஸா!
மாலைதீவு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 31
மாலைதீவுக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு 90 நாள்கள் காலப்பகுதியைக் கொண்ட இலவச வருகை விஸாக்களை வழங்க மாலைதீவு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது மாலைதீவுக்குப் பயணம் மேற்கொண்டு அங்கு பல்தரப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்தப் பேச்சு

(பக்கம் 11)

ஆவரங்காலில் விபத்து;
## முதியவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாணம் - ஆவரங்கால் பகுதியில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த முதியவர், மேலதிக சிகிச்சையின்போது மறுநாள் உயிரிழந்தார்.
முல்லைத்தீவு - உடையார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த இளையதம்பி நந்தகுமார் (வயது-70) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

(பக்கம் 11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 30.07.2025 | திகதி 30.07.2025 | திகதி 30.07.2025 | திகதி 30.07.2025 | திகதி 30.07.2025 | திகதி 30.07.2025 | திகதி 30.07.2025 | திகதி 30.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4148 | சீட்டிழுப்பு இலக்கம் 1215 | சீட்டிழுப்பு இலக்கம் 0174 | சீட்டிழுப்பு இலக்கம் 2254 | சீட்டிழுப்பு இலக்கம் 5906 | சீட்டிழுப்பு இலக்கம் 1936 | சீட்டிழுப்பு இலக்கம் 0481 | சீட்டிழுப்பு இலக்கம் 0022 |
| ஆங்கில எழுத்து Z | வெற்றி இலக்கினம் கன்னி | ஆங்கில எழுத்து G | ஆங்கில எழுத்து Q | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து Y | ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கினம் விருட்சிகம் |
| | | | சுப்பர் இலக்கம் 19 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 03 22 33 80 | வெற்றி இலக்கங்கள் 09 50 52 60 | வெற்றி இலக்கங்கள் 5 1 8 6 | வெற்றி இலக்கங்கள் 15 29 47 56 | வெற்றி இலக்கங்கள் 1 1 9 8 8 0 | வெற்றி இலக்கங்கள் 08 17 34 72 | வெற்றி இலக்கங்கள் 9 8 8 0 | வெற்றி இலக்கங்கள் 04 16 25 38 |
| விசேட எழுத்து Z | | | | | விசேட எழுத்து Y | | |

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் ஜனாதிபதிக்குக் கட்டுப்பாடுகள்

## வலியுறுத்துகின்றார் சட்டத்தரணி அம்பிகா

**கொழும்பு, ஜூலை 31**

**புதிதாக உருவாக்கப்படும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் ஜனாதிபதிக்கான அதிகாரங்களை மட்டுப்படுத்த வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும், ஐ.நா. முகவரகத்தின் உறுப்பினருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.**

இதுதொடர்பில் அவர் நீதி அமைச்சுக்கு அனுப்பியுள்ள பரிந்துரைக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது: புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் நீதிமன்றத்தின் அல்லது நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தல், சில இடங்களை தடை செய்யப்பட்ட பகுதிகளாக வரையறுத்து மக்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்தல் போன்ற அறிவிப்புகளை வெளியிடுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படக்கூடாது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயச் சட்டத்தின் 9 ஆவது பிரிவானது ஒரு நபரைக் கைதுசெய்வதற்கோ அல்லது தடுத்துவைப்பதற்கோ சட்டத்தின் ஊடாக வரையறுக்கப்பட்ட நியாயமான காரணம் இருக்கவேண்டும் எனவும், அவ்வரையறையானது மிகத்தெளிவாக போதிய விளக்கத்தைத் தரக்கூடியவகையில் அமைய வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றது.

அதேவேளை, 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கான வரைவிலக்கணம் நிச்சயமாக உள்வாங்கப்படவேண்டும். அத்தோடு அந்த வரைவிலக்கணமானது குறிப்பானதாகவும், உரிய சட்டக்கோட்பாடுகளுக்கு உட்பட்டதாகவும் அமையவேண்டும்.

அதேவேளை இந்த வரைவிலக்கணம் 'தேசிய, இன மற்றும் மத வெறுப்புணர்வு' அல்லது 'ஒடுக்குமுறை வன்முறை' அல்லது 'அத்தியாவசிய சேவை வழங்கலுக்கான இடையூறு' போன்ற பரந்துபட்ட விளக்கத்தை உள்ளடக்கியிருக்கக்கூடாது.

முன்னைய அரசாங்கங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைபுகளில் இவ்வாறான பதங்கள் உள்வாங்கப்பட்டிருந்தன. இவை கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை முடக்குவதற்கும், தொழிற்சங்க நடவடிக்கை போன்ற சட்ட ரீதியான சிவில் சுதந்திரத்தை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படக்கூடும் - என்றுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி 30.07.2025 | தினம் புதன்கிழமை | வெற்றி வாரம் 0614 |
| ஆங்கில எழுத்து X | வெற்றி இலக்கம் 4 3 4 9 4 7 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி 30.07.2025 | தினம் புதன்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் 2880 | ஆங்கில எழுத்து J | வெற்றி இலக்கம் 02 10 13 22 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி 30.07.2025 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கம் 10 35 68 77 | வெற்றி வாரம் 5041 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி 30.07.2025 | தினம் புதன்கிழமை | |
| மீனம் | வெற்றி இலக்கம் 24 45 58 59 | சீட்டிழுப்பு வாரம் 4592 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி 30.07.2025 | தினம் புதன்கிழமை | | |
| ஆங்கில எழுத்து F | சுப்பர் இலக்கம் 35 | வெற்றி இலக்கம் 32 49 69 72 | வெற்றி வாரம் 2056 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி 30.07.2025 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கம் 02 31 37 65 | வெற்றி வாரம் 2706 |

| JAYODA | | |
|---|---|---|
| திகதி 30.07.2025 | தினம் புதன்கிழமை | |
| ஆங்கில எழுத்து S | வெற்றி இலக்கம் 16 26 40 61 | வெற்றி வாரம் 2148 |

# எம்.பி.க்களின் ஓய்வூதியத்தை இரத்துச்செய்ய சட்டவரைவு

கொழும்பு, ஜூலை 31

நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்துச்செய்வதற்கான சட்டவரைவு அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்று பொதுப்பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு அறிவித்துள்ளது. நீதி அமைச்சால் உருவாக்கப்பட்டுள்ள இந்தச் சட்டவரைவு மறுஆய்வுக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது. (எ-இ)



# உயர்தரத் தொழிற்கல்விக்கு சா/த பெறுபேறு விலக்களிப்பு

கொழும்பு, ஜூலை 31

2025/2026 கல்வியாண்டிற்கான உயர்தரத் தொழிற்கல்விப் பிரிவில் தரம் 12 இல் இணைவதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரணதரப் (சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் இந்தப் பிரிவில் இணையக் கருத்திற்கொள்ளப்படுவதில்லை. இது மாணவர்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வித் தகுதியை (NVQ நிலை 4) பெற வாய்ப்பளிக்கிறது. மாணவர்கள் 13 ஆம் வகுப்பு வரை பாடசாலைக் கல்வியைத் தொடரும்போது இந்தத் தகுதியைத் தொடரலாம். 2024 (2025) அல்லது கடந்த 2 ஆண்டுகளுக்குள் சாதாரண தரப் பரீட்சை எழுதிய எந்தவொரு மாணவரும் தங்கள் பகுதியில் தொழிற்கல்விப் பிரிவுள்ள பாடசாலையில் 12 ஆம் வகுப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

சாதாரண தரப் பரீட்சையில் மாணவர்கள் தேர்ச்சி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் பதின்மூன்று ஆண்டுகள் கல்வியை உறுதிசெய்யும் நோக்கில், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சினால் இந்தப் பிரிவு செயற்படுத்தப்படுகிறது. (ச)

# தகவல் அறியும் ஆணைக்குழுவுக்கு தலைவரை நியமிக்கக்கோரி மனு

கொழும்பு, ஜூலை 31

தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு தலைவரை நியமிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு உத்தரவிடக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர் மிதுன் ஜயவர்தன மற்றும் தெயட சவிய அமைப்பு தாக்கல் செய்த இந்த மனுவில், ஜனாதிபதி, அவரது செயலாளர், சபாநாயகர் மற்றும் அரசமைப்புப் பேரவையின் உறுப்பினர்கள் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்னவின் பதவி விலகலைத் தொடர்ந்து, கடந்த மார்ச் 9ஆம் திகதி முதல் அந்த ஆணைக்குழுவின் தலைவர் பதவி வெற்றிடமாக உள்ளது என்று மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த வெற்றிடம் தகவல் அறியும் உரிமைகள் தொடர்பான விசாரணைகளை இடைநிறுத்தியுள்ளது என்றும், 2016ஆம் ஆண்டு 12ஆம் இலக்கத் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களை அணுகும் பொதுமக்களின் உரிமை மீறப்படுகின்றது என்றும் மனுதாரர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ-இ)

# கல்விச் சீர்திருத்தங்களை அரசு அரசியலாகப் பார்க்கக்கூடாது!

## அஜித் பி பெரேரா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 31

கல்வித்துறையில் பெரும் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதை நம்பியே மக்கள் வாக்களித்தனர். இந்த விடயத்தை அரசியலாகப் பார்க்காமல் அரசாங்கம் அதன் பொறுப்பை நிறைவேற்றவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இருந்து 1 முதல் 6ஆம் வகுப்புகளில் பாடத்திட்டங்களில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் என்று அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. பாடத்திட்டங்களில் மாற்றங்களை ஏற்படுத்துவது மாத்திரம் கல்விச் சீர்திருத்தம் அல்ல. ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் உட்பட அனைத்தும் அதில் அடங்கும். அதேபோன்று பாடசாலை கல்வியை மாத்திரம் மறுசீரமைப்பதாலும் மாற்றங்களை ஏற்படுத்தமுடியாது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஊடாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அதற்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய விசுவாவசு வருட மஹோற்சவத் திருவிழாவின் முதலாம் நாள் மாலை உற்சவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. இதன்போது வெள்ளிமயில் வாகனத்தில் நல்லூர் வேற்பெருமானும், வெள்ளி அன்னப்பட்சி வாகனத்தில் வள்ளி தெய்வானை நாயகியரும் அடியவர்கள் புடைசூழ உள்வீதி, வெளிவீதி உலா வந்தனர். (ச-66)






# ஆடிவேல் பவனி

யாழ்ப்பாணம், ஜுலை 31

நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காமம் தேவஸ்தான 2025 ஆம் ஆண்டின் வருடாந்த மஹோற்சவம் நடைபெற்றுவருகின்றது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30மணியளவில் எம்பெருமானுக்கு விஷேட அபிஷேக ஆராதனைகள், விஷேட பூஜைகள் நடைபெற்று எம்பெருமானின் தீர்த்த உற்சவத்திற்கு விஷேடமாக அமைக்கப்பட்ட தீர்த்தக் கொட்டகையில் தீர்த்த உற்சவம் இடம்பெறும். மறுநாள் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30மணிக்கு விஷேட அபிஷேக ஆராதனைகளும் பூஜைகளும் நடைபெற்று தொடர்ந்து எம்பெருமான் விஷேடமாக அலங்கரிக்கப்பட்ட ஆடிவேல் ரதத்தில் எழுந்தருளி ஆடிவேல் ரத பவனி வருவார்.

இந்த ஆடிவேல் ரதப் பவனியின்போது சட்டநாதர் கோயில் வீதியினைச் சுற்றிவந்து முருகப்பெருமான் காட்சியளிப்பார். இந்த ரத பவனியில் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# நல்லை ஆதினத்தில் தெய்வீக அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஜுலை 31

நல்லூர்க் கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 10 மணிக்கு "தெய்வீகக் கலை அர்ச்சனை" நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அந்தவகையில் இன்று வியாழக்கிழமை அராலி கிழக்கு மலையாளங்காட்டு ஐயனார் பஜனைக் குழுவினரின் பஜனை நிகழ்வும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கற்கைநெறிப் புராண படன மாணவர்களான ஈ. நவிஷா மற்றும் திருமதி சோ. நிரஞ்சனா ஆகியோரின் புராண படனமும் இடம்பெறவுள்ளன. (ச)


# தெய்வீகக் கூட்டத்தொடர் மூன்றாம் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுலை 31

நல்லூர் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் மூன்றாம் நாள் நிகழ்வு, நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை, மாலை 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.


வேதாந்தமடம், ஸ்ரீ சிவகுருநாதபீட 8 ஆவது குரு பீடாதிபதி ஸ்ரீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, இந்து சாதனம் பத்திரிகையின் ஆசிரியர் சிவஸ்ரீ தியாக. மயூரகிரிக் குருக்கள் தலைமையில், இந்தத் திருக்கூட்ட நிகழ்வு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி பா.தனபாலன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். கலைநிகழ்வுகளை உடுவில் பிரதேச செயலகப் பிரிவின் இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை, ஏழாலை இந்து மாதர்சங்க அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கவுள்ளனர். சிறப்புக் கலை நிகழ்வாக திருமதி லஜந்தா குணா நெறியாள்கையில் லஜநாட்டிய நடனப் பள்ளி மாணவர்கள் வழங்கும் பக்திப் பரதம் நடன நிகழ்வு இடம்பெறவுள்ளது. (ச)





பளை திரியாய் அம்மன் ஆலய கடல் தீர்த்தத் திருவிழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ச-25,9)





# நல்லூரான் சிறப்பம்சம்

## அகால அவலங்களை நீக்கக் கொடியேறு

போதையால் நாடு தள்ளாடுகிறது முருகா,
பொறுப்பானவர்கள் எங்கே முருகா?
பொன்போல பிள்ளைகளுக்கு
ஊக்கமளிப்பது யார் முருகா?
பொல்லாதவர்களைக் கண்டுபிடித்து சிறையிலிடு முருகா!
பாதை தவறிய மாந்தர்களால்
பண்பாடு குலைந்ததே முருகா!
பச்சிளம் பாலகிகள் அவர்களால் சீண்டிப்
பறிக்கப்படுகிறார்களே முருகா!
சேதாரம் ஏற்படுத்தும் பஞ்சமாபாதகங்கள்
தேசமெல்லாம் மலிந்ததோ முருகா!
சேறு என்று தெரிந்தும் சொல்வழிகேளாது
சீவனைச் சித்திரவதை செய்கிறார்களே முருகா
ஆதாரமாகவே பொன்விளையும் பூமியாக நம்பூமி இருந்தும்
அதை எவருமே தலைவணங்கவில்லை முருகா,
அராஜகம் ஆணவம் அகால அவலங்களை
அகற்றக் கொடியேறு முருகா!

கே.எஸ்.சிவஞானராஜா

## நாதமும் மேளமும்

தாளத்தோடிணையும்
நல்லூரான் புகழ்பாட
நாவினிலே இனிக்கும்
சீதமதிக்குடைக்கீழ் அகம்
சிங்காரம் காணும்
சிந்தையிலே வந்தமர்வான்
சிவனாரின் மைந்தன்
மாதிருவர் சூழும் மன்னனிவனாக
மயூரன் மனம் கனிந்தருள
மயிலேறி வருவான்
ஆதாரம் இவனென்றே
அடியார் பதம் பற்ற
அழகுக் கொடியேறுமம்மா
அருட்காட்சி காண!

தேவி.கணேஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தை வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதால், உற்சாகமாக இருப்பீர்கள். சகோதரர்களால் நன்மை உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**இடபம்:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத தனலாபம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது வீண்மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பேச்சில் நிதானம் தேவை. மாலையில் உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்கள் வருகையால் வீட்டில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக் கூடும். மகிழ்ச்சி ஏற்படும்.

**கடகம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகப் பணிகளில் பொறுமை அவசியம்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். உற்சாகமான சூழ்நிலையே காணப்படும்.

**கன்னி:** சகோதரர்களால் சிறுசிறு சங்கடங்கள் ஏற்படும். பொறுமையுடன் இருப்பது நல்லது. தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**துலாம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். புதிய முயற்சிகளைத் தொடங்குவது சாதகமாக முடியும். உடல்நலனில் கவனம் தேவை. தாயின் அன்பும் ஆதரவும் மகிழ்ச்சி தருவதாக இருக்கும்.

**விருச்சிகம்:** உறவுகளால் ஆதாயம் ஏற்படக்கூடும். மகிழ்ச்சி உண்டாகும். இளைய சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும்.

**தனுசு:** தேவையற்ற செலவுகள் ஏற்படும். சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு உண்டு. பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**மகரம்:** புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஏற்படக்கூடும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்:** காரியங்களில் பொறுமை தேவை. எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். வெளியூர்ப் பயணங்களைத் தவிர்க்கவும். வீட்டில் சிறு சலசலப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உறவினர்கள் உங்கள் முயற்சிகளுக்கு ஆதரவாக இருப்பார்கள். ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.


# தாதியர் பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 31

2020,2021, மற்றும் 2022 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல், கணிதம் மற்றும் விவசாயப் பிரிவில் தோற்றியோரிடமிருந்து தாதியர் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி க.பொ.த. சாதாரணதரத்தில் தமிழ், கணிதம், விஞ்ஞானம், மற்றும் ஆங்கிலத்தில் திறமைச் சித்தியுடன் இரு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல், கணிதம் அல்லது விவசாயப் பிரிவில் ஒரே தடவையில் 3 பாடங்களிலும் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

18 வயதுக்குக் குறையாமலும் 28 வயதுக்குக் கூடாமலும் இருப்பதுடன் திருமணம் ஆகாதவராக இருக்கவேண்டும். சுகாதார அமைச்சின் இணையத்தளமான "WWW. health.gov.lk" எனும் இணையவழியூடாக விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும். மேலதிக தகவல்களுக்கு 0713526234 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம். (ச-25)



கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாகசதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை சிறப்புப் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று சுவாமி வீதிவலம் வந்து அருள்பாலித்தார்.(ச-41-17)

# பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 2025ஆம் ஆண்டுக்கான பரிசு வழங்கல் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30மணிக்கு தந்தை செல்வா கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபர் செல்வகுணாளன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழையமாணவரும் பி.இன்ஜி. (கணினி அமைப்புகள் பொறியியல்) தலைமை இயக்க அதிகாரியும் அவெர்சன் இன்க். கான்கிரீட் கனடா நிர்வாக இயக்குநருமான நாதன் நந்தகுமாரன், சிறப்பு விருந்தினராக பட்டய கணக்காளர், பட்டய மேலாண்மைக் கணக்காளர் இயக்குநரும் ஐ.எம்.எல் டெலிவரி சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (சிட்டிபாக்) தலைமை நிர்வாக அதிகாரியும் ஹேலிஸ் குழுமத்தின் உறுப்பினரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவருமான தியாகராஜா வசீகரன், இடர் மேலாண்மை, கே.பி.எம்.ஜி. இலங்கை இயக்குநரும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனம் உறுப்பினருமான சீதா வசீகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-41)




# மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ்.ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் வெளியீட்டு விழா ஆலய மண்டபத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது.

ஆலயத்தின் போஷகர் பரா.சாந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் யாழ். பிரதேசச் செயலகக் கணக்காளர் சிறிதரன், அபிவிருத்தி உத்தியோகத்தர் சர்வேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (ச-41)



# நம்புட்டான் விலை வீழ்ச்சி



யாழ்ப்பாணம், ஜூலை 31

யாழ். குடாநாட்டில் றம்புட்டான் பழங்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

தென்பகுதியிலிருந்து வியாபாரிகளால் யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்டு வீதிக்கு வீதியாக றம்புட்டான் பழங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. 20 றம்புட்டான் முன்பு 200 ரூபா வரையில் காணப்பட்ட நிலையில் தற்போது 100ரூபாவாக விற்கப்படுகின்றன. (ச-17)

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய ஆடிப்பூரவிழா நேற்றுமுன்தினம் பக்திபூர்வமாக நடைபெற்றது. அம்பிகைக்கு ருது சாந்தி நிகழ்வு நடைபெற்று அதனைத் தொடர்ந்து அம்மன் அழகிய தாமரைப்பூ வாகனத்தில் வீதியுலா வரும் திருக்காட்சி இடம்பெற்றது. (ச-25,66,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான

# ஆட்கொணர்வு மனு வழக்கு ஓகஸ்ட் 28ஆம் திகதி தீர்ப்பு!

**யாழ்ப்பாணம், ஜூலை 31**
**1996ஆம் ஆண்டு நாவற்குழியில் இராணுவம் முன்னெடுத்த சுற்றிவளைப்பின் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட 22 பேர் தொடர்பான ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டுள்ளது.**

இந்த மனு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது. சம்பவம் நடைபெற்ற இடம் சாவகச்சேரி நீதிமன்றத்தின் நியாயாதிக்க எல்லைக்கு உட்படுவதால் இந்த வழக்கு சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டு விசாரணைகள் நடைபெற்றுவந்தன.
இந்த வழக்குத் தீர்ப்புக்காக நேற்றுத் திகதியிடப்பட்டிருந்தது.
ஆயினும் நீதிவான் விடுமுறையில் உள்ளதால் வழக்கு ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டுள்ளது. (எ-20,27,28)

# ஆசனப்பட்டி கட்டாயம்!

கொழும்பு, ஜூலை 31
பஸ்களில் ஆசனப்பட்டி கட்டாயமாக்கும் சட்டவிதிகளை விரைவில் கடுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.
இந்தச் சட்டத்துக்குக் கீழ்ப்படியாத பஸ்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்படும். ஒவ்வொரு ஆண்டும் வாகன விபத்துகளால் சுமார் 2,350 பேர் உயிரிழக்கின்றனர். அதனாலேயே போக்குவரத்து அமைச்சு 2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்கான வீதிப் பாதுகாப்புத் திட்டத்தில் ஆசனப்பட்டி ஒழுங்குமுறையை நடைமுறைப்படுத்தியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



# நல்லூர்ப் பெருந்திருவிழாவுக்கு இனி மணல் வழங்கப்படாது!

*பருத்தித்துறைப் பிரதேசசபையில் தீர்மானம்*

யாழ்ப்பாணம், ஜூலை 31
நல்லூர்ப் பெருந்திருவிழாவுக்காக இனிவரும் காலங்களில் வடமராட்சி கிழக்கிலிருந்து மணல்மண் வழங்குவதில்லை என்ற தீர்மானம் பருத்தித்துறைப் பிரதேசசபையில் கொண்டுவரப்பட்டுள்ளது.
பருத்தித்துறைப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் ஆரம்பமானது.
இதில் நல்லூர் முருகன் ஆலயத்துக்கு மணல் வழங்குவதற்குத் தவிசாளரால் தன்னிச்சையாக அனுமதி வழங்கப்பட்ட விவகாரம் தொடர்பாக சபையில் வாதப்பிரதிவாதங்கள் நீண்டநேரம் இடம்பெற்றன. அதற்கமைய இனிவரும் காலங்களில் நல்லூர் முருகன் ஆலயத்துக்கு வழங்கப்பட்ட மணல் மண்ணை மீளப் பாவிக்கக் கோருவதுடன் இனிவரும் காலங்களில் வடமராட்சி கிழக்கிலிருந்து மணல்மண் வழங்குவதில்லை என்ற தீர்மானமும் கொண்டுவரப்பட்டது. (ச-27)



# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பீடி இலைகள் தமிழகத்தில் மீட்பு

சென்னை, ஜூலை 31
தமிழ்நாடு, இராமநாதபுரத்தை அடுத்துள்ள வெள்ளரி ஓடைக் கடற்கரையில் இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 2 ஆயிரத்து 250 கிலோ பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இது தொடர்பாக வெள்ளரி ஓடையைச் சேர்ந்த ஒருவர் தமிழக கியூப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
பாரவூர்தி ஒன்றில் இருந்து படகுக்கு பீடி இலைகள் மாற்றப்பட்டுக்கொண்டிருந்தபோது பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர். படகில் இருந்த இருவர் 10 பீடி மூடைகளுடன் தப்பிச் சென்றுள்ளனர். பாரவூர்தியைக் கைப்பற்றிய பொலிஸார் சந்தேகநபர் ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். (எ-56)

# 'இலஞ்ச ஓ.ஐ.சி.' கைது

கொழும்பு, ஜூலை 31
ஒக்கம்பிட்டியப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் இலஞ்சம் அல்லது ஊழல் ஆணைக் குழுவினால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
மணல் அகழ்வு நடவடிக்கைகளுக்காக குறித்த அதிகாரி இலஞ்சம் கோரினாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (சு)

# நாமலுக்கு பிணை

கொழும்பு, ஜூலை 31
அம்பாந்தோட்டை நீதவான் நீதிமன்றினால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச நேற்றுமுந்தினம் செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் முன்னிலையானதையடுத்து பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.
வழக்கொன்றுக்காக அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை அழைக்கப்பட்டபோது, நாமல் ராஜபக்ச நீதிமன்றில் ஆஜராகாது இருந்தமையால் அவருக்குப் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. (ச-இ)

## முரளிதரனுக்கு 'சல்யூட்'!

குட்டையைக் குழப்பினாத்தான் மீன் பிடிக்கலாம். ஆனால் எங்கட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில குட்டையை மட்டும் குழப்புகினமே தவிர உருப்படியா ஒரு சூடைமீனைக்கூட பிடிக்கிறதாக் காணேலை. அதிலையும் மூலம் தள்ளுற அளவுக்குக் கத்துறதுக்கும், அரசாங்க அதிகாரிமாரை கேவலப்படுத்துறதுக்காகவும்தான் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்கள் நடக்குதோ எண்ட ஐமிச்சம் சனத்துக்கு இருக்கு. அதைவிட ஒவ்வொரு கூட்டத்திலையும் போனமுறை எடுத்த தீர்மானங்களை நடைமுறைப்படுத்தோணும் எண்டு இன்னொரு தீர்மானம் எடுக்கிறதோட, எல்லாரும் வெளிக்கிட்டிடுவினம். பிறகு அடுத்த கூட்டத்துக்கு வரேக்கதான் எல்லாருக்கும் போனமுறையான் தீர்மானம் நினைவுக்கு வரும். பிறகென்ன, திரும்பவும் அதை நிறைவேற்றவேணும் எண்டு தீர்மானத்தை எடுக்கிறதோட விசயம் முடிஞ்சிடும். கடைசிமட்டும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்ட விசயங்கள் எல்லாம் வெறும் தீர்மானமாத்தான் இருக்குமே தவிர, ஒண்டும் ஒப்பேறியிருக்காது.

இப்பிடி ஒப்பேறாத ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களின்ர கதை கிளிநொச்சியில மாத்தி எழுதப்பட்டிருக்குது. கனகாலமா இழுபறிப்பட்டுக்கொண்டிருந்த ஒரு விசயத்தை சத்தமே இல்லாமல் சாதிச்சிருக்கிறார் அங்கத்தை மாவட்டச் செயலர். பெற்றார் இல்லாத ஆதரவற்ற பிள்ளையளுக்காக இயக்கம் செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை எண்ட ரண்டு இல்லங்களை நடத்தினது. சண்டைக்குப் பிறகு செஞ்சோலையிலையும், காந்தரூபன் அறிவுச்சோலையிலையும் வளர்ந்தவை, தங்களுக்கு இருக்க வேற இடம் இல்லாததால இங்கயே ( செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை இயங்கின இடங்களில) காணி தரச்சொல்லிக் கேட்டவை. இயக்கத்தின்ர காணியை இவைக்குக் குடுக்கலாம்தானே எண்டு எல்லாரும் அபிப்பிராயப்பட்டவை. ஆனால் அதுக்கும் சிலர் ஆப்புவைச்சிட்டினம். செஞ்சோலையும், காந்தரூபன் அறிவுச்சோலையும் இயங்கின இடங்களை இயக்கம் வலுக்கட்டாயமாத் தங்களிட்டப் பறிச்சது எண்டும், அதைத் திருப்பி தங்களிட்டத் தரச்சொல்லியும் சிலர் உறுதியளோட வந்திட்டினம். உண்மையில இயக்கம் அவையிட்ட காசு குடுத்தோ இல்லாட்டி வேற இடத்தில காணி குடுத்தோதான் இந்தக் காணியளை எடுத்ததெண்டு எல்லாருக்குமே தெரியும். ஆனாலும் உறுதியோட வந்துநிண்டு மல்லுக்கட்டேக்க சட்டத்தின்படிதானே போகலாம். அதால இந்த விசயத்தைக் கையில எடுத்தா சிக்கல் எண்டு எல்லாரும் நழுவிட்டினம். முந்திக் கிளிநொச்சிக் கச்சேரிக்குப் பொறுப்பா இருந்த அம்மணி, வீணைக்காரருக்கும், கேடயக்காரருக்கும் பணிவிடை செய்துகொண்டிருந்ததாலயோ என்னவோ, இவையின்ர பிரச்சினைக்குத் தீர்வொண்டும் சொல்லாமாலே காலத்தைக் கடத்திட்டா.

இப்ப செஞ்சோலை, காந்தரூபன் அறிவுச்சோலை இருந்த இடங்களுக்கு உரிமை கொண்டாடினவையில் வேற இடங்களில காணியள் இல்லாதவைக்கு அவையின்ர காணியைக்குடுத்து பிரச்சினையைத் தீர்த்திட்டினம். அதுக்குப் பிறகு மிச்சக் காணியை ஆளுக்குக்கால்ஏக்கர் வீதம்செஞ்சோலையிலையும், காந்தரூபன் அறிவுச்சோலையிலையும் வளர்ந்த 52 பேருக்குப் பிரிச்சுக் குடுத்திருக்கினம். போனமுறை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில இந்த 52 பேருக்கும் காணி குடுக்கச் சொல்லி திரும்பக் கோரிக்கை வைச்சவை. இந்தமுறை ( 29 ஆம் திகதி) ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில வழக்கம் மாதிரி தீர்மானத்தை எடுத்துக் காலத்தைக் கடத்தாமல், அவையின்ர பிரச்சினைக்கு நல்ல தீர்வையும், காணியையும் மாவட்டச் செயலர் குடுத்திருக்கிறார். 'அடுத்த காணிக்கச்சேரி கெதியில நடக்க இருக்குது. அதில இந்த 52 பேருக்கும் காணி ஆவணமும் எடுத்துக்குடுத்தி டுவம்'எண்டு மாவட்டச் செயலர் சொல்ல, அங்க இருந்த இன்னொரு அதிகாரி 'இந்த 52 பேருக்கும் வீடு கட்ட பத்து லட்சம் ரூபாப்படி குடுக்கிறதுக்கும் திட்டங்கள் இருக்கு. அதையும் குடுக்க நாங்கள் ஒழுங்கு செய்யிறம்' எண்டு வாக்குறுதி குடுத்திருக்கிறா. இப்பிடி உருப்படியாவும் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்கள் நடந்தால் சனத்தின்ர பிரச்சினையள் எல்லாத்தையுமே தீர்க்கலாம். இதைப் பார்த்தாவது வெறும் பேப்பர் தீர்மானங்களோட காலத் தைக் கடத்திற மற்ற மாவட்டங்களில கச்சேரியைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கிறவை திருந்தினால் நல்லது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமெண்டா இப்பிடித்தான் செயற்பாட்டோட இருக்கோணும் எண்டு காட்டின கிளிநொச்சி மாவட்டச் செயலர் முரளிதரனுக்கு பட்சியின்ர 'சல்யூட்'!

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னமும் திருத்தப்படாத மின்தூக்கி; நோயாளிகளைத் தாங்கும் மாணவர்கள்

## கிளிநொச்சி மருத்துவமனையில் அந்தரிப்பு

கிளிநொச்சி, ஜூலை 31
கிளிநொச்சி மாவட்ட மருத்துவ மனையில் பயன்பாட்டிலிருந்த மின்தூக்கி கடந்த ஒரு வாரமாகச் செயலிழந்து காணப்படும் நிலையில் நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணிகளில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளனர். மருத்துவமனையின் நோயாளர் விடுதிகள் உட்பட சத்திரசிகிச்சைக் கூடம் எனப் பெரும்பாலான மருத்துவசேவைகள் முதலாவது மாடியிலேயே காணப்படுகின்றன. மின்தூக்கி செயலிழப்பால் நோயாளர்களைப் படிக்கட்டு வழியாகவே ஏற்றி இறக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட நோயாளர்கள் கடும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-214)





### யாழ்.நகரப்பகுதியில்

# ஆலய எல்லையைத்தாண்டி வீதியோரத்தில் கட்டுமானம்!

*மாநகரசபை முன்னாள் உறுப்பினர் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஜூலை 31
யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்திருக்கும் இந்திய நாட்டுக்கோட்டை செட்டிமார்களுக்குச் சொந்தமான கதிரேசன் கோயிலின் கோபுரத்துக்கான தூண்கள் ஆலய மதில் எல்லைக்கு வெளியே கே.கே.எஸ்.வீதியில் நிறுவப்படுகின்றன. இதற்கு யாழ்.மாநகரசபை அனுமதிக்கின்றதா? என யாழ்.மாநகரசபை முன்னாள் உறுப்பினர் நா.தனேந்திரன் கேள்வியெழுப்பியுள்ளார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
மக்கள் போக்குவரத்து மற்றும் வாகன நெரிசல் அதிகமாக உள்ள யாழ்.நகரின் மத்தியில் இதை அனுமதிக்கலாமா?
குறித்த கட்டுமானத்தால் விபத்துகளும் உயிர்ச்சேதங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே குறித்த ஆலயத்தின் கோபுரம் மற்றும் அதனுடன் கூடிய கட்டுமானப் பணிகளை ஆலய வளாகத்துக்குள்ளேயே மேற்கொள்ளவேண்டும் என்றும் ஆலய எல்லை மதிலுக்கு வெளியே வீதியில் எந்தவொரு கட்டுமானப்பணியும் மேற்கொள்ளக்கூடாது என அறிவுறுத்தவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார் (ச)



# சகல பிரிவுகளுடனும் யாழ்.போதனா சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 31
வடக்கில் யாழ். போதனா மருத்துவமனை தற்போது சகல பிரிவு களையும் கொண்டு இயங்குகின்றது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்திய மூர்த்தி தெரிவித்துள்ளார்.
மருத்துவமனையில் மேலும் கட்டட வசதிகளும் உபகரண மற்றும் ஆளணி வசதிகளும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.
அண்மையில் யாழ். போதனாவுக்கு மருத்துவ விடுதி களுக்காக இரண்டு கட்டில்களும் சில உபகரணங்களும் ஐக்கிய இராச்சியத்தில் இருந்து வருகைதந்திருந்த அன்பரினால் கையளிக்கப்பட்டது.
போதனா மருத்துவமனையின் சில விடுதிகள் அண்மையில் திறக்கப்பட்டதும் இவ்வாறு புதிய உபகரணங்கள் வழங்கப்படுவதும் மருத்துவ சேவையை மேலும் வலுப்படுத்துகின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச- 27.66)


## கேள்வி அறிவித்தல்
## சாவகச்சேரி பிரதேசசபை
## சபை நிதி வேலைத்திட்டம் மற்றும் மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி (PSDG) வேலைத்திட்டம் கட்டம் IV 2025

1. சாவகச்சேரி பிரதேசசபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தவிசாளர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கு தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக்கேள்வியாளரிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் கேள்விகளை கோருகின்றார்கள்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. விலைக்கேள்வியாளர்கள். நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) வீதி / கட்டடம் நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு. இவ் விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும். கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப் படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
விலைக்கேள்வியாளர்கள் பொது கொன்றாக் சட்டம் 1987 இல 03 ன் பிரகாரம் பதிவினை மேற்கொண்டிருக்க வேண்டும்.
4. தகைமை பற்றிய தகவல்கள் பெறுகை ஆவணத்தின் வகுதி 4 ல் குறிப்பிடப்பட்டுள்ளதோடு. மேலதிக தகைமைத் தேவைகளிற்கான வேலைகளுக்கு SBD 3 ற்கமைவாக பெறுகை ஆவணத்தின் அட்டவணை (Schedule -5) வகுதி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.
5. கேள்விகள் சமர்ப்பிக்கும் போது பெறுமதிசேர் வரி (VAT) வலுவிலுள்ள சான்றிதழ் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான ஆவணங்கள் உள்ளடங்கிய கேள்விதாரருக்கு மாத்திரமே வரிக் கொடுப்பனவை கோர முடியும்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியிலுள்ள சாவகச்சேரி பிரதேசசபையில் (தொலைபேசி : 021-2050348, 0212050356 தொலைநகல் : 021-2050348) மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் 2025.07.31 தொடக்கம் 2025.08.14 வரையான காலப்பகுதியில் வேலைநாட்களில் காலை 09:00 மணி முதல் 15:00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை உள்ளூராட்சி மன்ற பெறுகை குழு, சாவகச்சேரி பிரதேசசபை. A9 வீதி கொடிகாமம் எனும் முகவரியில் 2025.07.31 ஆம் திகதியிலிருந்து 2025.08.14 ஆம் திகதி வரை காலை 09:00 மணிக்கும் மாலை 14:00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா. 3,000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி. நகல்பிரதி என தனித்தனியாக உறைகளிட்டு தலைவர். உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு. சாவகச்சேரி பிரதேசசபை. A9 வீதி கொடிகாமம் எனும் முகவரிக்கு 2025.08.15 ஆம் திகதி மாலை 02:30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகள் அனைத்தும் அன்றையதினமே (2025.08.15) மாலை 2.30 மணிக்கு திறக்கப்படும். இதன்போது கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி (ஒருவர் மாத்திரம்) கலந்துகொள்ளமுடியும்.
9. கீழ் காட்டப்படும் கேள்விகள். கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து NP/14/41(6)/2/C.F/2025/051, NP/14/41(6)/2/PSDG/2025/07, NP/14/41(6)/2/PSDG/2025/08 இலக்க வேலைக்கு 77 நாட்கள் (2025.11.01) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழ்வரும் அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். கேள்வி பிணையானது அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் பிணைமுறி அல்லது எமது அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு அல்லது நிர்மான உத்தரவாத நிதி (CGF) ஆகியன மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
11. கேள்விகள் தொடர்பான முன்னோடிக் கலந்துரையாடல் 2025.08.07திகதி மாலை 15:00 மணிக்கு பிரதேசசபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் அனைவரும் இக்கலந்துரையாடலில் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

| தொடர் இல | கேள்வி இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (வரி நீங்கலாக) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | வேண்டப்படும் தரம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | கேள்விப் பிணை செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/41(6)/2/C.F/2025/051 | வீதி மின்விளக்குகள் கொள்வனவு செய்தல் | 2.00 | 63 | C9 or above /பதிவு செய்யப்பட்ட வியாபார உரிமச்சான்றிதழ் | 20,000.00 | 2025.08.15 - 2025.11.30 வரை |
| 2 | NP/14/41(6)/2/PSDG/2025/07 | கைதடி சீகாவத்தை வீதி புனரமைப்பு | 4.66 | 84 | C8 or above (வீதி நிர்மாணம்) | 46,700.00 | 2025.08.15 - 2025.11.30 வரை |
| 3 | NP/14/41(6)/2/PSDG/2025/08 | கைதடி ஊரியான் வீதி புனரமைப்பு | 5.50 | 84 | C8 or above (வீதி நிர்மாணம்) | 56,000.00 | 2025.08.15 - 2025.11.30 வரை |

தலைவர்.
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு.
சாவகச்சேரி பிரதேசசபை.

2025.07.31


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நேற்றைய செயல் உங்களுக்குப் பெரிதாக தெரிந்தால், இன்று நீங்கள் எதையும் செய்யவில்லை என்று அர்த்தம்


– லூ ஹோல்ட்ச் –

# மனமிருந்தால் மார்க்கமுண்டு!

'மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டு, மக்கள் பிரதி நிதித்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும்' என்று எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் வலியுறுத்தியுள் ளன. மாகாணசபைகளில் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாமலிருப்பது ஜனநாயக விரோதமானது என்ப தைத் தேர்தல் ஆணைக்குழுவும் ஏற்றுக்கொண்டது டன், 'அரசாங்கம் கூறும் பட்சத்தில் தேர்தலை நடத்தத்தயார்' என்றும் அறிவித்திருக்கின்றது. ஆக, ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைத்தவிர, ஏனைய அனைத்துத் தரப்பினரும் மாகாணசபைத் தேர்தல் ஒன்றுக்கு விரைவாகச் செல்வதற்குத் தயாராகவே உள்ளனர். இவ்வாறிருக்கையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் தின் தயக்கம் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தவும் செய்கின்றது.

ஜே.வி.பி.யில் இருந்து உதயமானதுதான் தற்போதைய அரசாங்கமான தேசிய மக்கள் சக்தி. இந்தியாவின் தலையீட்டால் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட மாகாணசபைத் தேர்தல் முறைமையை அடியோடு நிராகரித்து அதற்கு எதிராகப் போராட்டங்களை முன்னெடுத்த கட்சிதான் ஜே.வி.பி. மாகாணசபை மூலம் தமிழர்கள் பலம்பெற்றுவிடக்கூடாது என்பதற்காக, வடக்கு - கிழக்கு மாகாணங்களை நீதி மன்ற நடவடிக்கைகள்மூலம் பிரித்து இரு துண்டாக்கியவர்களும் ஜே.வி.பி.யினரே. எனவே, உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் காண்பித்த வேகத்தில் பாதியைக்கூட மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் காண்பிக்காதமை திட் டமிட்ட 'அரச நிகழ்ச்சி நிரலின்' கீழான நடவடிக் கையா? என்ற சந்தேகம் எழுந்தால் அதில் தவறில்லை. மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்ற வாக்குறுதியை தேசிய மக்கள் சக்தியினர் வழங்கியுள் ளனர் என்பது மறுப்பதற்கில்லை. கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர், சபை முதல்வரும் அமைச்சரு மான பிமல் ரத்நாயக்க என்று பலரும் பல்வேறு சந்தர்ப் பங்களில் மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பில் கருத்துப் பகிர்ந்துள்ளனர். எனினும், அவர்கள் அனை வரும் பொதுமைப்பாடான கருத்தை வெளிப்படுத்தி யதாக இல்லை. இவ்வருட இறுதிக்குள் தேர்தல் நடக்கும் என ஒருவரும், எதிர்வரும் வருடத்தின் ஆரம் பத்துக்குள் தேர்தல் நடக்கும் என இன்னொருவரும் மாறிமாறி வாய்மூல வாக்குறுதிகளைத்தான் தந்த வண்ணம் உள்ளனர். இதே நடைமுறைதான் முன் னாள் ஜனாதிபதி ரணிலின் அரசாங்கத்திலும் இருந்து, பின்னர் தேர்தலே இல்லையென்றானது.

மாகாணசபைத் தேர்தல் எப்போது என்ற திகதியை அறிவிக்காவிடினும், குறைந்தது மாதத்தையேனும் அரசாங்கம் அறிவிப்பதற்கு முன்வரவேண்டும். இல் லையேல், துல்லியத் தகவல் மூலம் ஒரு நம்பிக்கையைத் தமிழர்களிடத்தில் ஏற்படுத்தவேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்த நிதியில்லை என்ற சப்பைக் கட்டுக் காரணங்களை ஏற்பதற்குத் தமிழர்கள் தயாரில்லை. ஏனெனில், அநுர ஆட்சிபீடம் ஏறிய சூடு ஆறுவதற்குள்- ஆதரவு சிதறுவதற்குள் அரசாங்கம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றது. நாடாளுமன்ற ஆட்சியைக் கைப்பற்றி சில வாரங்களுக்குள் உள்ளாட்சித் தேர்தலையும் நடத்தியது. இவற்றுக்கு நிதி எங்கிருந்து வந்தது? ஒருவேளை உண்மையில் தேர்தலை நடத்த நிதியில்லை என்றால், சர்வதேச நாடுகளிடம் - குறிப்பாக இந்தியாவிடம் இருந்து உதவி கள் கிட்டவே செய்யும். எனவே, மாகாணசபைத் தேர்தலை நடத்த அரசாங்கத்துக்கு மனம் ஒப்ப வேண் டும் என்பதே அனைத்திற்கும் பிரதானம். மனமிருந் தால் மார்க்கமுண்டு, மாகாணசபைத் தேர்தலுமுண்டு.




# புகையிலை வரி அதிகரிக்க அனுமதி




கொழும்பு, ஜூலை 31

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு பீடிக்கும் அற விடப்படும் புகையிலை வரியை 2 ரூபாவிலிருந்து 3 ரூபாவாக அதிகரிக்கும் வர்த்தமானிக்கு அரசாங்க நிதி பற்றிய குழு அனுமதி வழங்கியுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் அண் மையில் நடைபெற்ற அரசாங்க நிதி பற்றிய குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டது. அதிக வரிகளைப் பரிந்துரைக் கும்போது வணிகங்கள் தலைமறைவாகும் என்ற பொருளாதாரக் கொள்கைக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-இ)

# இனியபாரதியின் இன்னொரு சகா கைது

மட்டக்களப்பு, ஜூலை 31

இனியபாரதியின் இன்னொரு சகாவான வெலிகந்தை தீவுச் சேனையைச் சேர்ந்த பால கிருஷ்ணன் சபாபதி என்ப வரை மட்டக்களப்புக் கிரா னில் வைத்து நேற்றுமுன்தி னம் செவ்வாய்க்கிழமை கொழும்பிலிருந்து சென்ற குற்ற விசாரணைப் பிரிவு கைதுசெய்துள்ளது.

இதேவேளை இதுவரை இனியபாரதியின் சகாக்கள் 4 பேரை சி.ஐ.டியினர் தொடர்ச் சியாகக் கைதுசெய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)





# உயிர்மாய்ப்போர் உயர்வு

கொழும்பு, ஜூலை 31

தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொள்ளும் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ளதாக மன நல நோய்க்கான விசேட மருத்துவ நிபுணர் வின்தியா விஜயபண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வாழ்க்கையில் இடம்பெறும் பிரச்சி னைகளுக்கான ஒரே தீர்வு உயிரை மாய்த்துக்கொள்வது அல்ல.

எனவே, உயிரை மாய்த்துக்கொள்ள நினைப்பவர்கள் உடனடியாக மன நல மருத்துவர்களை நாடுவது அவ சியமாகும்.

மனரீதியாக பாதிக்கப்பட்டு உயிரை மாய்த்துக்கொள்ள முயலும் நபர் கள் தேசிய மனநல சுகாதார நிறுவ னத்தின் 1926 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தொடர்புகொள் ளுங்கள்- என்றார். (ச-இ)

# ரோஹிதவின் மகள் சரணடைவு

கொழும்பு, ஜூலை 31

நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன வின் மகள், வாலானா குற்றத் தடுப்புப் பிரிவில் சரணடைந் துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக ஒன்றுசேர்க் கப்பட்டதாகக் கூறப்படும் வாக னம் தொடர்பான வழக்குக் காகவே அவர் சரணடைந்துள் ளார். (ச-இ)

# அனுமதியற்ற கட்டுமானம்; ஆண்டுதோறும் அபராதம்

கொழும்பு, ஜூலை 31

கடற்கரையோரத்தில் கட்டப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டு மானங்களுக்கு ஆண்டுதோறும் அபராதம் விதிக்க கரை யோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட கடற்கரை வலயத்துக்குள் உள்ள அங்கீக ரிக்கப்படாத சில கட்டடங்களை அகற்றுவதன்மூலம் கடலோ ரப் பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால் அதனைப் பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்டு இந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டத்துக்கு புதிய மேலதிக செயலர்கள்

மன்னார் மாவட்டத்துக்கான நிர்வாகம் மற்றும் காணி விவகாரங்களுக்குப் பொறுப்பாக மேலதிக மாவட்டச் செயலர்கள் பொது நிர்வாக அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள னர்.

அவர்கள் மன்னார் மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன் முன்னிலையில் தமது கடமைகளை நேற்றுப் புதன்கிழமை பொறுப் பேற்றுக்கொண்டனர். மன்னார்ப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய மனோகரன் பிரதீப், மடுப் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய கீ.பீட்நிஜாகரன் ஆகியோரே இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ச-25,56)




## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs.3000.00 |
| மேசன் உதவியாளர் | - Rs.2000.00 - 2500.00 |
| வெல்டர் (அனுபவமுள்ளவர்கள்) | - Rs.3000.00 |
| வயறிங் வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs.3000.00 |
| பிளமிங் வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs.3000.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs.3000.00 |

**தினசரி சம்பளம் வழங்கப்படும்.**
(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)

தொடர்புகளுக்கு: 077 2100 749
(காலை 8.00 - மாலை 5.30 வரை) - யாழ்ப்பாணம்.
(CS 58986) A

## வேலையாட்கள் தேவை

பண்ணையொன்றிற்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு:- 077 403 2855

## வீடுகள் வாடகைக்கு உண்டு

வெள்ளவத்தை பம்பலப்பிட்டியில் A/C Room (நாள் - 5500/-), Normal Room (நாள் - 3500/-). நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு. A/C வீடுகளும், Normal வீடுகளும் வாடகைக்கு உண்டு. 3500 தொடக்கம் 15000/- வரை.

077 717 8579

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**Business Global International Award Organazations**
**சர்வதேச தொழில்சார் அனைத்துலக விருது வழங்கும் அமைப்பின் விருது வழங்கும் நிகழ்வு**
இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர்கூடம், கொழும்பில் 26.07.2025 சனிக்கிழமை அன்று நடைபெற்ற வேளை யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய
**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**
அவர்களின் தன்னலமற்ற சமய, சமூக பணிகளிற்காக
**சமூக சேவைக்கான அதிஉயர் சாதனையாளர் விருது**
வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர நாமும் வாழ்த்துகின்றோம்
உரிமையாளரும், ஊழியர்களும்
**சிறி மீனாட்சி நகை அகம்**
177B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

## வேலையாட்கள் தேவை

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO)
HND or NCT-Civil
கணிய அளவையியலாளர் (QS)
HND or NCT-QS
சுயவிபரக் கோவையை Email மூலம் அனுப்பி வைக்கவும்.
starbuilders2025@gmail.com
யாழ்ப்பாணம்.
(CS 58985) A


## பெயர் மாற்றம்

குளங்கரை வீதி, கோண்டாவில் கிழக்கில் வசிக்கும் தவராசசிங்கம் கமலராணி ஆகிய நான் எனது பெயரை தவராசசிங்கம் கனகேந்திரராணி என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் தவராசசிங்கம் கனகேந்திரராணி என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு உறுதிப்படுத்துகின்றேன்.

**தவராசாசிங்கம்**
**கனகேந்திரராணி**

## செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்., ஜூலை 31 சர்வசக்தி முன்பள்ளியின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு எதிர்வரும் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் நடைபெறவுள்து. சர்வசக்தி சனசமூக நிலையத் தலைவர் மதன் பிரசாந்து தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊரெழு கணேசா வித்தியாசாலை அதிபர் இரா. ஜெயக்குமார், சிறப்பு விருந்தினராக கிராம அலுவலர் ம.ஞானேந்திரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ச)


## அறிவிப்பு

எலாயன்ஸ் பினான்ஸ் பி எல் சி நிறுவனம் அதன் பங்குதாரர்களுக்கு சிறந்த சேவையை வழங்க அதன் மைய வங்கி அமைப்பு மற்றும் பிற ஒருங்கிணைப்புகளை மேம்படுத்தல்.

**இந்த அமைப்பு மாற்றம்**
**2025 ஆகஸ்ட் 1 முதல் 6 வரை நடைபெறும்.**

இந்த நேரத்தில், எங்கள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தேவையின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட சேவைகள் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு உங்கள் தொடர்பு அதிகாரி, அல்லது கிளை, அல்லது எங்கள் ஹாட்லைன் 1321 ஐ அழைக்கவும்.

1956 இல் இருந்து
**எலாயன்ஸ் பினான்ஸ்**
கம்பனி பி.எல்.சி
செளபாக்கியத்திற்கோர் நம்பிக்கையான அடித்தளம்

"எலாயன்ஸ் இல்லம்",வோட் பிரதேசம் ,கொழும்பு 07
www.alliancefinance.lk


## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 09 . 1945



மறைவு 30 . 07 . 2025

### ஐயாத்துரை சுப்பிரமணியம்

புத்தூரைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சுப்பிரமணியம் அவர்கள் நேற்று (30.07.2025) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு-சின்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் ஈஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பகவதி அவர்களின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற இளையதம்பி அவர்களின் மைத்துனரும் காலஞ்சென்ற ராஜசுலோசனா கந்தசாமி மற்றும் திருமதி பத்மசுலோசனா பாலசுந்தரம், ஜெயம்லோசனா யோகேந்திரன், திருமதி அப்பலோசனா காலஞ்சென்ற விநாயகமூர்த்தி மற்றும் திருமதி குசலகுமாரி நாகேஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2025) வியாழக்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**நவாலி வீதி,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 059 1767**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவனுக்கு ஊக்குவிப்பு

சாவகச்சேரி, ஜுலை 31

தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில் அண்மையில் வெளியான க. பொ. த.சாதாரணதரப் பரீட்சையில் 9 பாடங்களிலும் ஏ சித்தி பெற்ற சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் மாணவன் பா. கிந்துசனுக்கு சைக்கிள் மற்றும் உயர்தரப்பாட வகுப்பு கற்கும் காலத்துக்கான உதவித் தொகை என்பன வழங்கிவைக்கப்பட்டன.


கல்லூரியின் பழையமாணவர்களின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவித் தொகை கையளிக்கப்பட்டது. நிகழ்வில் தென்மராட்சி சமூக மேம்பாட்டு அமையத்தின் நிறுவுனர் ம. நடனதேவன் மற்றும் உறுப்பினர் து. கணேஸ்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,9)





மன்னார் தள்ளாடி 54ஆவது இராணுவப் படைப்பிரிவின் ஏற்பாட்டில் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் மன்னார் கடற்கரைப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன்போது மன்னார் வங்காலை, கீரி, சௌத்பார், தலைமன்னார், முத்தரிப்புத்துறை ஆகிய பகுதிகளில் உள்ள கடற்கரையோரங்கள் தூய்மையாக்கப்பட்டன. (ச-25, 56-213)





# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜுலை 31

யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் 25ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தின் ஓரங்கமாக இரத்ததான முகாம் நல்லூர் குறுக்கு வீதியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் பிரதான மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-41-20)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் வித்தாக 09 . 02 . 1951



விண்ணில் சொத்தாக 04 . 08 . 2022

அமரர் **பத்தகுமார் ரஞ்சினி** (கமலேஸ்வரி)

**திதி: ஆடி வளர்பிறை சஷ்டி (31.07.2025)**





அண்ணா அண்ணா என
என்னை பாசமுடன்
அழைத்து ஆனந்தித்து உறவாடிய
என் அன்புத் தங்கையே
உன் பிரிவை நினைத்து நினைத்து
கண்ணீர் வடிக்கிறேனம்மா!
ஆண்டுகள் மூன்று என்ன எத்தனை
ஆண்டுகள் ஆனாலும் உன்
நினைவுகளோடு வாழும்
உன் அன்பு அண்ணா

உரும்பிராய் வடக்கு

உமது பிரிவால் வாடும்
கருணாகரன் (கருணை)

(CS 58991) E

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 09 . 12 . 1959



உதிர்வு 01 . 07 . 2025

அமரர்

திருமதி **இரஞ்சிதம் நித்தியானந்தன்**

**(ஓய்வுநிலை ஆசிரியை யாழ் இந்து மகளிர் கல்லூரி)**

உன்னதமாய் உங்கள் பணி
தொடரும் என நாம் நினைத்தோம்.
ஓர் நொடிக்குள் எல்லாவற்றையும்
கனவாக்கி பாரகன்று போனதேனோ
மனம் ஆறாது நாமிங்கு கண்ணீரால் அஞ்சலிக்கின்றோம்.
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டி
பிரார்த்திக்கின்றோம் இறைவனிடம்.

நரச்சிவளவு
நெற்கொழு வைரவர் கோவிலடி
கொம்மந்துறை,
உடுவில்

கனவர், பிள்ளைகள், மருமக்கள், பேர்த்தி
மற்றும் குடும்பத்தினர்.
077 670 1370, 076 747 5943

(CS/58992) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பளை மத்திய கல்லூரியில் நட்பு ரீதியான சாரணப் பாசறை நிகழ்வின் இறுதி நிகழ்வானது பளை மத்திய கல்லூரியின் அதிபர் தலைமையில் கல்லூரி வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மத்திய கல்லூரி, பளை மத்திய கல்லூரி, வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட சாரணர்கள் பங்குபற்றினார்கள். (ச-25,9)

# குருபூசை நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஜூலை 31*


ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 40ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது. தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து "குருவாய் வருவாய்" எனும் தலைப்பில் ஆசிரியர் துரை கணேசமூர்த்தி சிறப்புரையாற்றுவார். (ச-41-66)




# மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 31

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கடந்த 2022, 2023 மற்றும் 2024ஆம் ஆண்டுகளில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த சித்திகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் மற்றும் கற்பித்த ஆசிரியர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர். கல்லூரியின் முதல்வர் திருமதி சுலபாமதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அதிதிகளாகக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை, முன்னாள் ஆசிரியர் பூசலட்சுமி பொன்னுத்துரை ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25,27)



வரலாற்று சிறப்புமிக்க கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் தீர்த்த உற்சவம் அண்மையில் சிறப்பான முறையில் நடைபெற்றது. அத்துடன் ஆடி அமாவாசை தினத்தை முன்னிட்டு இறந்தோருக்கான வழிபாடுகளும் பிதிர்த் தர்ப்பணமும் நடைபெற்றன. (ச-25)



# உணவு கையாள்தல் கலந்துரையாடல்

மன்னார், ஜூலை 31

பேசாலைப் பகுதியிலுள்ள உணவகங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் விற்பனை செய்வோருக்கான சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் மன்னார்ப் பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பேசாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கஜேந்திரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வளவாளராக மன்னார் பொதுச்சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர் கே.சி.வின்சன்ட், மன்னார் நகர் பொதுச் சுகாதார பரிசோதகர் வை.ஜெனீஸ் மற்றும் மன்னார்ப் பிரதேசசபை வருமானவரிப் பரிசோதகர் ஆகியோர் கலந்து கொண்டனர். வர்த்தகர்கள் உணவுப் பொருள்களை வழங்கும் விதம், உணவு தயாரிக்கும் இடங்களின் சுத்தம், தனி மற்றும் பொதுச் சுகாதாரம் போன்ற விடயங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டன. (ச-25,60)

# INVITATION FOR BID 2025/11
# VALIKAMAM EAST PRADESHIYA SABHA
# NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee**, on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Tourism.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 Document
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2025-07-31 To 2025-08-14** during **09:00 hrs and 15:00 hrs.**
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the Chairman, Valikamam East Pradeshiya Sabha, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail.Com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha Puttur as stated in table below.**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | |
|---|---|
| Document Issuing/Purchasing Period | From 2025-07-31 To 2025-08-14 |
| Pre-Bid Conference | At 10.30 A.M on 2025-08-07 |
| Closing and Opening of Bids | At 2.00 P.M on 2025-08-15 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(13)/4/ Tourism/2025/01 | Establishment of Movable Food Stalls & Beautification works at Akkarai Beach | 4.24 | 63 | C9 or above (Building) | 2,500.00 | 43,000.00 | 31.10.2025 | 49 |

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha,**
**Puttur.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக...

ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே பத்தலங்குண்டுவா மற்றும் மன்னார் வடக்குப் பகுதிகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த அந்த 14 மீனவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மீனவர்கள் அனைவரும் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 14 மீனவர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்திய மத்திய அரசாங்கதை வலியுறுத்தியுள்ளார். (அ-ம-56)

## எதிர்வரும்...

மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்துறையின் தலைவரும், வானிலை ஆய்வாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வெப்பச் சலனம் காரணமாக, நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 14ஆம் திகதிவரை மழைக்குச் சாத்தியங்கள் உள்ளன. குறிப்பாக, எதிர்வரும் 6ஆம் திகதியளவில் இலங்கையின் கிழக்கு, தென் கிழக்கை அண்மித்து வங்காள விரிகுடாவில் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி உருவாகித் தாழமுக்கமாக மாற்றமுற்று மேற்கு, வட மேற்குத் திசையில் நகரும் வாய்ப்புள்ளது. இதனால், எதிர்வரும் 6ஆம் திகதி முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. எதிர்வரும் 17ஆம் திகதி வங்காள விரிகுடாவில் மீண்டுமொரு வளிமண்டல மேலடுக்குச் சுழற்சி உருவாகும் வாய்ப்புள்ளது. எனினும், எதிர்வரும் 10ஆம் திகதிக்குப் பின்னரே இதனை உறுதிப்படுத்தமுடியும்.

இதேவேளை, நேற்றையதினம் வடக்கு மாகாணத்தின் உள் நிலப்பகுதிகளில் குறிப்பாக நெடுங்கேணி, மாங்குளம், மடு, செட்டிக்குளம், துணுக்காய், பாண்டியன்குளம், புளியங்குளம், ஓமந்தை, தாண்டிக்குளம், கீரிசுட்டான், முறிகண்டி, ஆனைவிழுந்தான், ஒட்டுசுட்டான், தம்பலகாமம், கந்தளாய், வாகரை மற்றும் வெருகல், போன்ற இடங்களில் மிக உயர்வான வெப்பநிலை நிலவிய நிலையில் இன்றைய தினமும் மிக உயர்வான வெப்பநிலை தொடரும் - என்றுள்ளது. (அ-ம-66)

## ரஷ்யாவில்...

நிலநடுக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, ரஷ்யா, ஜப்பான், சீனா, அமெரிக்கா, கனடா, கியூபா ஆகிய நாடுகளில் அடுத்தடுத்து சுனாமி அலைகள் ஏற்பட்டுள்ளன. ரஷ்யாவின் அதிநவீன கட்டமைப்பு, நிலநடுக்கம் தொடர்பில் உரிய எச்சரிக்கையைத் துரிதமாக வழங்கியதால், உடனடியாக முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், ரஷ்யாவிலும் ஏனைய நாடுகளிலும் உயிரிழப்புக்கள் பதிவாகவில்லை. 'இப்படியொரு பெரிய நிலநடுக்கத்தை எதிர்கொண்ட பின்னரும் உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்பது நம்பமுடியாத அசாதாரண விடயம். இதற்காக கடவுளுக்கு நன்றி' என்று ரஷ்ய அரசாங்கத்தின் பேச்சாளர் டிமிட்ரி பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

நேற்றைய நிலநடுக்கத்தால் அதிகளவு பாதிப்பை எதிர்கொண்ட நாடாக ஜப்பான் காணப்படுகின்றது. அங்கு ஒன்பது இலட்சம் மக்களை வெளியேறுமாறு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. (அ-ம-இ)

## குழந்தையை...

செம்மணி மனிதப் புதைகுழி மீதான அகழ்வுப் பணிகளின் இரண்டாம்கட்ட நடவடிக்கையின் 25ஆம் நாள் பணிகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே, குழந்தையின் என்புத்தொகுதியை வலது கரத்தால் அணைத்தவாறு என்புத்தொகுதியொன்று அவதானிக்கப்பட்டு - மீட்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் 4 என்புத்தொகுதிகள் புதிதாக அடையாளம் காணப்பட்ட நிலையில், ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட 3 என்புத்தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக இதுவரை 115 என்புத்தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட நிலையில், 102 என்புத்தொகுதிகள் முற்றாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## விளையாட்டு...

விளையாடுவதற்குப் பதிலாக, மேலதிக வகுப்புகள் மற்றும் வீடியோ கேம்கள் என்றுதான் காலத்தைச் செலவிடுகின்றனர். இதனால், சூரிய ஒளிமூலம் கிடைக்கும் விற்றமின் டி அவர்களுக்குக் கிடைக்காமல் போகின்றது. இது சாதாரண விடயமல்ல. தீவிரமான உடல்நலப் பிரச்சினைகள் இதனால் ஏற்படுகின்றன. இந்தக் குறைபாட்டுடன்தான் இன்று ஏராளமான குழந்தைகள் வளர்கின்றனர்.

சுமார் 20 முதல் 30 ஆண்டுகளுக்கு முன்னர் விற்றமின் டி பிரச்சினை குழந்தைகளிடம் இருந்ததில்லை. ஆனால் இன்று மிகச் சாதாரணமாக இந்தக் குறைபாடுகள் குழந்தைகளுக்கு ஏற்படுவது வேதனையான விடயம்.

மத்திய கிழக்கு நாடுகளில் அதிக வெப்பத்தால் குழந்தைகள் மைதானங்களுக்குச் செல்வதில்லை, ஐரோப்பிய நாடுகளில் அதிக குளிர் நிலவும். இதனால், மத்திய கிழக்கு நாடுகளிலும், ஐரோப்பிய நாடுகளிலும் வாழும் குழந்தைகள்தான் இதுவரை காலமும் விற்றமின் டி குறைபாட்டுடன் காணப்பட்டனர். இலங்கை இயற்கையாகவே சூரிய ஒளியைப் பெறும் நாடாகக் காணப்படுகின்றது. அப்படியிருந்தும் விற்றமின் டி குறைபாடு ஏற்படுவதை ஏற்கமுடியாது - என்றார். (அ-ச-இ)

## இசை...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

புத்தூர் மேற்குப் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் நேற்றுமுன்தினம் இரவு இசை நிகழ்ச்சி நடைபெற்றுள்ளது. அந்த இசை நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக மேற்படி இளைஞர் சென்றுள்ளார். நீண்டநேரமாக அவரைக் காணாததைத் தொடர்ந்து, இளைஞரின் தாயார் தேடிச்சென்றுள்ளார். இதன்போது, வீட்டு ஒழுங்கைக்குள் அந்த இளைஞர் அசைவற்று வீழ்ந்து கிடந்துள்ளார்.

உறவினர்களின் உதவியுடன் அவர் மீட்கப்பட்டு உடனடியாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். இதன்போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்பதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையில், பாம்பு தீண்டியதால் இறப்புச் சம்பவித்ததாகத் தெரியவந்தது.

சடலம் மீதான மரண விசாரணைகளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-23-20)

## இலங்கையர்...

வார்த்தைகளைத் தொடர்ந்தே, இலங்கையர்களுக்கு 90 நாள்கள் காலப்பகுதியைக் கொண்ட இலவச வருகை விஸாக்களை வழங்க மாலைதீவு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மாலைதீவில் தங்கியிருக்கும் காலத்தில், தமது செலவுகளை மேற்கொள்வதற்குப் போதுமான நிதி இருந்தால் இந்த இலவச விஸாக்களை இலங்கையர்கள் எவரும் பெற்றுக்கொள்ளமுடியும். இரு நாடுகளுக்கும் இடையிலான 'இலகுபடுத்தல் விஸா வசதி ஒப்பந்தத்தின் கீழ்' இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாலைதீவு அரசாங்கம் அறிவித்துள்ளது. (அ-ம-இ)

## முதியவர்...

அச்சுவேலியில் உள்ள தனது உறவினரைச் சந்திக்க வந்த இடத்தில், வீதியைக் கடக்க முற்பட்டபோது இந்த விபத்துச் சம்பவித்துள்ளது. இதையடுத்து அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே மறுநாள் உயிரிழந்துள்ளார். சடலம் மீதான மரண விசாரணைகளை, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-20)

## லலித்,...

ஆட்கொணர்வு வழக்குத் தொடர்பான மேன்முறையீட்டு மனு கொழும்பு உயர் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே, இந்த ஆட்கொணர்வு மனு மீதான வழக்கில் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக கோத்தாபயவின் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தெரிவித்தார்.

எனினும், தற்போதுள்ள பாதுகாப்புக் காரணங்களுக்காக கோத்தாபய ராஜபக்ச யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்குப் பதிலாக கொழும்பு நீதிமன்றத்தில் சாட்சியமளிப்பதற்கே தயாராக உள்ளார் என்றும் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா கூறியுள்ளார்.

இதன்போது, மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், இந்தக் கோரிக்கையை ஒரு வாரத்துக்குள் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, பொருத்தமான உத்தரவுகளைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வாவுக்கு அறிவுறுத்தியது.

மனுதாரர்கள் சார்பாக முன்னிலையான சட்டத்தரணி நுவான் போபகேவும் அந்தக் கோரிக்கைக்கு தமது இணக்கத்தை தெரிவித்தார். அதன்படி, மேன்முறையீட்டு மனுவின் விசாரணையை முடிவுறுத்துவதற்கு நீதியரசர்கள் குழாம் முடிவுசெய்தது.

இந்த வழக்குத் தொடர்பாக சாட்சியமளிக்க நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு, சம்பவம் இடம்பெற்ற காலப்பகுதியில் பாதுகாப்புச் செயலாளராக பதவி வகித்திருந்த கோத்தாபய ராஜபக்சவுக்கு 2019ஆம் ஆண்டு அறிவித்தல் அனுப்பப்பட்டது. எனினும், பாதுகாப்புக் காரணங்களுக்காக யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்குச் செல்லமுடியாது எனக்கூறி, கோத்தாபய ராஜபக்ச மேன்முறையீடு செய்திருந்தார்.

மனுவை விசாரித்த மேன்முறையீட்டு நீதிமன்றம், யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க கோத்தாபயவுக்கு வழங்கப்பட்ட அறிவித்தலை இரத்துச் செய்தது. இந்தநிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் குறித்த தீர்ப்பை இரத்துச்செய்யக் கோரி, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டைத் தாக்கல் செய்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-இ)

## போலி...

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேலும் தெரிவித்ததாவது:-

போலி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்பி இடம்பெறும் பணமோசடிகள் நாட்டில் கணிசமாக அதிகரித்துள்ளன. இதனால், 'ஓ.ரி.பி.' என்று சொல்லப்படக்கூடிய ஒற்றைப் பாவனைக் கடவுச்சொல் விடயத்தில் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். கடவுச்சொற்கள் தனிப்பட்ட பாவனைக்கே அன்றி, எவருடனும் பகிர்ந்துகொள்வதற்காக அல்ல - என்றுள்ளது. (அ-ச-இ)

## தொடர்ச்சியான...

திருகோணமலை - சம்பூரில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்றபோது மனித என்புத்தொகுதிகள் சில மீட்கப்பட்டிருந்தன. இதையடுத்து, மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் தொடர்பிலும், அந்தப் பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பிலும் அறிக்கை வழங்குமாறு தொடர்புடைய மருத்துவ அதிகாரிகளுக்கு மூதூர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த அறிக்கை நேற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், சம்பூரில் மீட்கப்பட்ட என்புத்தொகுதிகள் நீண்டகாலத்து உட்பட்டவையாகக் காணப்படுகின்றன. அந்தப் பகுதியில் விரிவான அகழ்வுப் பணிகளை மேற்கொண்டாலே தீர்க்கமான தீர்மானங்களை எடுக்கமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து, எதிர்வரும் 6ஆம் திகதி நீதிமன்றத்தில் விரிவான கலந்துரையாடலை நடத்தி, தொடர்ச்சியான அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதா? இல்லையா? என்று தீர்மானிக்கப்படவுள்ளது. (அ-ம-50)

## உதயனின்...

பணிமனையின் ஜன்னல்களை உடைத்து, அதன் வழியாக உள்நுழைந்த நபர்கள் அலுவலகத்துக்குள் இருந்த பெறுமதியான பொருள்கள் மற்றும் ஆவணங்களை திருடிச்சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கப்பட்ட நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன், சந்தேகநபர்களை அடையாளம்காணும் பொருட்டு, தடயவியல் நிபுணர்களும் அங்கு ஆய்வுப் பணிகளையும், தடயச் சேகரிப்பிலும், கைரேகை அடையாளப்படுத்தல் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

உதயனின் தலைமைப் பணிமனை மட்டுமல்லாமல், கிளிநொச்சி பிராந்தியப் பணிமனையும் கடந்த காலங்களில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கும் தாக்குதல்களுக்கும் உள்ளாகியிருந்தது. இது தொடர்பில் பொலிஸாரிடம் ஏற்கனவே பல்வேறு முறைப்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறான பின்னணியிலேயே, தற்போதும் உதயனின் கிளிநொச்சிப் பிராந்தியப் பணிமனையை இலக்குவைத்து இந்த விஷமச் செயல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## தாய்நாடு திரும்பியோருக்கு உதவித்தொகை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜுலை 31

இந்தியாவிலிருந்து மீளத் திரும்பியவர்களின் சமூக மான மீள் ஒருங்கிணைப்புக்கான உதவித் தொகை வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலர் அலுவல கத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

யு. என். எச். சி. ஆர் நிறுவனத்தால் கோப்பாய் மற்றும் சாவகச்சேரிப் பிரதேச செயலகப் பிரிவில் மீளத் திரும் பிய மூன்று குடும்பங்களைச் சேர்ந்த ஒன்பது பேருக்கு உதவித்தொகையாகத் தலா 90 ஆயிரம் ரூபா வீதம் மொத்தமாக 810,000 ரூபா வழங்கிவைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செய லர் ம. பிரதீபன் கலந்துகொண்டு உதவித்தொகையை வழங்கிவைத்தார். (ச-25,66)



## மூக்குக்கண்ணாடிகள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜுலை 31

கொழும்புத்துறையில் அமைந்துள்ள சுபீட்சம் அறக் கொடை நிதியத்தின் ஏற்பாட்டில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கும் நிகழ்வு சுபீட்சம் அறக்கொடை நிதிய ஸ்தாபகர் என்.யேசுதாஸ் தலைமையில் அண்மையில் நடைபெற் றது.

புலம்பெயர்வாளர் பி.றெக்சன் அனுசரணையில் தந் தையார் அமரர் ச.பிரான்சிஸின் ஞாபகார்த்தமாக இந்த மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டன. (ச)



## லயன்ஸ் கழகத்தால் வவுனியாவில் உதவிகள்

வவுனியா, ஜுலை 31

வவுனியா மாவட்ட சர்வதேச லயன்ஸ் கழகத் தால் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வவுனியா மாவட்ட லயன்ஸ் கழகத்தின் தலைவர் கே.செல் வராஜா தலைமையில் வவுனியா கந்தசுவாமி ஆலய வளாகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. இதன்போது இலவச கண்பரிசோதனையும், மூக்குக்கண்ணாடி வழங்கல், வறிய குடும்பங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கல், பாடசாலை மாணவர்களுக்குப் புத்த கப்பைகள் வழங்கல், சர்வதேசக் குத்துச்சண்டைப் போட்டியில் பங்குபற்றச் செல் லும் வீராங்கனைகளுக்கு உதவித்தொகை வழங்கல் ஆகிய நலத்திட்ட உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன. (ச-41-110)

காணி விற்பனைக்குண்டு

தெல்லிப்பழையில் K.K.S Road இல் இருந்து 140 மீற்றர் உள்ளே, வயலிருப்பை வைரவர் கோயிலுக்கு அருகாமையில் 5 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு

(CS 55968) E

தொடர்பு: 071 598 3245
077 360 4202

## சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜை தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுலை 31

சைவபரிபாலன சபையின் ஏற்பாட்டில் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூஜைசைவபரிபாலன சபையின் நிர்வாக சபை உறுப்பினர் செல்வி நா.நீலாம்பிகை தலை மையில் நாளை வெள் ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள் ளது.

பிரதம விருந்தினராக சன் மார்க்க மகா வித்தியாலய அதிபர் முருகையா ஸ்ரீத ரன் கலந்துகொள்வதோடு குறித்த பாடசாலை மாண வர்களும் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ள னர். (ச-25)

## நல்லூர் உற்சவகால சென் .ஜோன் அம்புலன்ஸ் முதலுதவி நிலையம்

யாழ்ப்பாணம், ஜுலை 31

சென். ஜோன் அம்புலன்ஸ் படையணியின ரின் நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவ கால முதலுதவி நிலையம் அரசடி வீதி நல்லை ஆதீன மணி மண்டபத்துக்கு அருகில் அமைந் துள்ளது.

தேவையானோர் சேவையைப் பெற்றுக்கொள் ளலாம் என அந்நிறுவனத்தின் யாழ்.மாவட்ட உதவி ஆணையாளர் சோ.ஈழநேசன் தெரி வித்துள்ளார். (ச-25)

மரண அறிவித்தல்

தோற்றம்
20 . 11 . 1952



மறைவு
30 . 07 . 2025

குமரேசு கருணாகரன்

புங்குடுதீவு 10ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமரேசு கருணாகரன் அவர்கள் நேற்று (30.07.2025) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமரேசு - அமராவதி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவஞானம் - சற்குணவதி தம்பதியினரின் மருமகனும் நாகேஸ்வரி (கலா) அவர்களின் அன்புக்கணவரும், கரிகரன் (பிரான்ஸ்), யுவேந்திரன் (பிரான்ஸ்), துசியந்தன் (சுவிஸ்), டினோசியா (கனடா), லக்சிகா, சரண்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜனனி, நிர்மலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆரஜனின் அன்புப் பேரனும், சண்முகநாதன், கிருஸ்ணலீலா, காலஞ்சென்ற சந்திரகோபால் மற்றும் நவலீலா, தவராஜசிங்கம், இந்திரராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும், கேதீஸ்வரன், கோடீஸ்வரன், ஜெகதீஸ்வரன், மகேஸ்வரன், தனேஸ்வரி, யசோதா, நந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.07.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக 02.00 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்

தகவல்:
குடும்பத்தினர்

(CS 55990) E



## கல்விக் கண்காட்சி

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையின் கல்விக்கண் காட்சி அதிபர் சி.சிவநாவலன் தலைமையில் கடந்த செவ் வாய்க்கிழமை பாடசாலை வளா கத்தில் இடம்பெற்றது. நிகழ் வில் பிரதம விருந்தினராக தென் மராட்சி வலயக் கல்விப்பணிப் பாளர் கி.கமலராஜன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப்ப ணிப்பாளர் எம்.ஜெகதாசன், வடமாகாண ஆரம்பக்கல்வி உத விக் கல்விப் பணிப்பாளர் அ.ரவீந்திரன், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-41-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.